RBI/2005-06/204
DBOD.No.Leg.BC.44/09.07.005/2005-06 நவம்பர் 11, 2005

பிராந்தியக் கிராம் வங்கிகள் தவிர
அனைத்து வணிக வங்கிகளுக்கும்

அன்புடையீர்,

<u>அனைவருக்கும் வங்கி வசதிகள்</u>

2005-06 ஆண்டுக் கொள்கை அறிக்கையின் இடைக்கால மறு ஆய்வின் 96 **வது** பாராவைப் பார்க்கவும்.

2. வங்கித் தொழில் நடைமுறைகள், பெரும்பாலான மக்களை கவர்தலுக்கு பதிலாக விலக்கி வைத்துக் கொண்டிருப்பதை 2005 ஏப்ரல் ஆண்டுக் கொள்கை அறிக்கை கவலையோடு கண்டுணர்ந்து, அப்படிப்பட்ட பெரும்பாலான மக்களையும் வங்கி இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளும் குறிக்கோளுடன் அத்தகைய நடைமுறைகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது. பல இலவச சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வங்கிகள் வழங்கினாலும், குறைந்த பட்சம் இருக்க வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் கட்டணங்கள், என்பது வங்கி கணக்கு துவக்க நினைக்கும் பெரும்பாலான மக்களை துவக்க விடாமல் தடுக்கிறது.

3. இத்தகைய சூழ்நிலையில், அனைவரும் வங்கி வசதிகள் அடையும் வண்ணம் பகட்டில்லாத அடிப்படை கணக்கு ஒன்றினை அனைத்து வங்கிகளும், தங்கள் தங்கள் வங்கியில் அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். அத்தகைய கணக்குகள் பெரும்பாலான மக்களும் அணுகும் முறையில், கட்டணம் ஏதும் இல்லாத அல்லது மிகக் குறைந்த பட்ச நிலுவைத் தொகை மற்றும் கட்டணங்களுடன் இருக்க வேண்டும். இக்கணக்குகளின் தன்மை மற்றும் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை பற்றி வாடிக்கையாளரிடம் முன் கூட்டியே தெளிவுற அறிவிக்க வேண்டும். இத்தகைய பகட்டில்லாத அடிப்படைக் கணக்கு வசதிகள் தங்கள் வங்கியில் நடைமுறையில் இருப்பது பற்றி இணைய தளம் உள்ளிட்ட பல வகையான வழிகளில் தெளிவான, பரநத முறையில் விளம்பரம் செய்ய வேண்டும்.

4. காலாண்டுக்கு ஒரு முறை இத்தகைய கணக்குகள் எத்தனை துவக்கப்பட்டன என்ற அறிக்கையையும் ஒவ்வொரு வங்கியும் ரிசர்வ் வங்கிக்கு அறிவித்திட வேண்டும்.

5. தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனே மேற்கொண்டு, ஒரு மாத காலத்திற்குள் தங்கள் செயல்பாட்டை எங்களுக்கு அறிவிக்க வேண்டுகிறோம்.

6. கிடைத்தமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

நம்பிக்கையுள்ள

பிரசாந் சரண்
தலைமை பொது மேலாளர்